**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII code of Criminal Procedure)

**IN THE COURT ASSISTANT SESSIONS JUDGE, HOSUR.**

**SC.No. 202/2022**

**CNR.No. TNK105-001573-2022**

Sessions Case – Accused present.

Deposition of witness for Prosecution **PW-1**

Name : Srinivasan

Father's Name : Govindappa

Village :

Taluk :

Caste :

calling :

Religion :

Age : 30

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.01.2024

**முதல் விசாரணை:-**

நான் சூளகிரியில் உள்ள ஒரு துணிக்கடையில் சேல்ஸ்மேனாக பணிபுரிந்து வருகிறேன். அதற்கு முன்பு பெங்களூரில் பொம்மனஹள்ளியில் கார்மென்ட்ஸ் கம்பெனியில் வேலை செய்து வந்தேன். என்னுடைய வீடு ஆரூப்பள்ளி கிராமத்தில் தோட்டத்தில் உள்ளது. கடந்த 11.02.2020 அன்று இரவு 8.00 மணிக்கு நான் வேலையை முடித்துவிட்டு என்னுடைய வீட்டிற்கு ஆரூப்பள்ளியை தாண்டி நான் என் வீட்டிற்கு பைக்கில் சென்றுக்கொண்டிருந்தேன். அப்போது எனக்கு பின்னால் ஆஜர் எதிரி கார்த்திக்கும் மாஸ்க் அணிந்திருந்த மற்றொருவரும் பல்சர் வண்டியில் வந்தனர். மாஸ்க் அணிந்திருந்தவர் தான் அந்த பல்சர் வண்டியை ஓட்டி வந்தார், அவர் பின்னால் கார்த்திக் அமர்ந்து வந்தார். அவர்கள் இருவரும் எனக்கு முன்னால் குறுக்காக வந்து என்னை வழிமறித்தனர், அவர்கள் என்னை பார்த்து கெட்ட வார்த்தையால் திட்டிக்கொண்டு இத்தனை நாள் தப்பித்துவிட்டாய், இப்போது எங்களிடம் மாட்டிக்கொண்டாய் என்று கூறி பின்னால் மறைத்து வைத்திருந்த வீச்ச அரிவாளால்

என்னுடைய பின் கழுத்தில் வெட்டிவிட்டார், இத்தோடு தொலைந்து போ என்று கூறி என்னை வெட்டினார். நான் அதன் காரணமாக கீழே விழுந்துவிட்டேன், விழுந்ததன் காரணமாக என்னுடைய காலிலும் அடிப்பட்டது. அப்போது நான் சத்தம் போட்டேன். அங்கு அருகில் சுப்பிரமணி என்பவருடைய வீடு இருந்தது. நான் அந்த வீட்டை நோக்கி ஓடினேன், அந்த வீட்டின் வெளியே அந்த வீட்டின் ஆட்கள் இருந்தார்கள். என்னுடைய தம்பி செல்வத்திற்கும் கார்த்திக்கின் அண்ணன் சின்னதம்பிக்கும் மற்றும் சிலருக்கும் பணம் கொடுக்கல் வாங்கலில் பிரச்சனை இருந்தது. அதன் காரணமாக கார்த்திக்கின் அண்ணன் கொலையாகிவிட்டார். அந்த பிரச்சனையின் காரணமாக என்னுடைய தம்பி ஜெயிலுக்கு சென்றுவிட்டார். அந்த பிரச்சனையின்போது கார்த்திக் எங்களுடைய வீட்டின் நபர்கள் யாரையாவது ஒருவரை கொலை செய்யாமல் விடமாட்டேன் என்று கூறியிருந்தார். கார்த்திக் என்னை வெட்டிய பிறகு நான் அந்த வீட்டை நோக்கி ஓடி அங்கிருந்தவர்களிடம் கார்த்திக் என்னை வெட்டியதாக கூறினேன், கழுத்தில் இரத்தம் வராமல் தடுப்பதற்காக ஒரு துணியை கொடுத்தார்கள். அதன் பிறகு நான் கார்த்திக் என்னை வெட்டிவிட்டதாக என்னுடைய நண்பர் முரளி என்பவருக்கு மொபைல் போன் மூலம் தகவல் கொடுத்தேன். அவர் கார் எடுத்துவந்து என்னை சூளகிரியில் உள்ள விஜயா மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். அங்கு முதல் உதவி சிகிச்சை பெற்ற பிறகு என்னை ஓசூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். அங்கும் முதல் உதவி பெற்றுக்கொண்ட பிறகு நான் சிகிச்சைக்காக ஓசூர் காவேரி மருத்துவமனையில் சேர்ந்தேன். அதன் பிறகு காலையில் போலீசார் வந்து என்னை விசாரித்தார்கள். என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றுக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான், அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1**. என்னிடம் காட்டப்படும் அரிவாளால் தான் கார்த்திக் என்னை வெட்டினார். அந்த அரிவாள் **சா.பொ.ஆ. 1.**

**முதல் விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

E SASIKALA

Digitally signed by E SASIKALA
Date: 2024.01.24 18:01:22 +0530